DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, DHARAPURAM

**SC. No: 37/2022 Deposition of Witness for : P.W. 7**

| | | | |
|---|---|---|---|
| Name | : விசாலாட்சி | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Age | : | Taluk | : |
| Village | : | District | : |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 23.03.2023

**All Accused present.**

முதல் விசாரணை

(சாட்சி பட்டியல் படி LW 8 ஆக காட்டப்பட்டு அசா 7 ஆக விசாரிக்கப்பட்டார்)

சத்தியமாக சொல்கிறேன். நான் தற்போது சிக்கனாபுரம் தண்ணீர்பந்தலில் வசிக்கிறேன். கூலி வேலை செய்கிறேன். இறந்து போன பாலசுப்ரமணி என்ற சுப்ரமணி என் கணவர். எனக்கு ஒரு பெண் குழந்தை உள்ளது 12 வயதாகிறது. ஆஜர் எதிரிகளை தெரியும். அசா.1 மீனாட்சி என் சித்தி. அசா.2 நவீன்குமார் என் ஊரைசேர்ந்தவர். மற்ற சாட்சிகளையும் தெரியும். 16.10.2021 அன்று மாலை 5.00-5.30 இருக்கும் . நான் என் வீட்டில் இருந்தேன். அசா1 மீனாட்சி போன் மூலம் தொடர்பு கொண்டு என் கணவரை ஆஜர் எதிரிகள் மூவரும் கத்தியால் குத்தி கொலை செய்ததாக சொன்னார். என்னை பஸ்ஸ்டாண்டிற்கு வருமாறு அழைத்தார். நானும் அசா1ம் பஸ் ஏறி உடுமலை ரவுண்டானா அருகே வந்தோம். எங்கள் ஊரிலிருந்து அனைவரும் பைக்கில் வந்தார்கள். நால்ரோடிலிருந்து பைக் மூலமாக தாராபுரம் அரசு மருத்துவமனைக்கு வந்தோம். என் கணவரை

பார்த்தபோது இடது முன் மண்டையில் ரத்தகாயம் காணப்பட்டது. முதல் உதவி சிகிச்சை செய்து ஆம்புலன்ஸ் மூலம் கோவை அரசு மருத்துவமனை கொண்டு சென்றார்கள். நானும் அசா1ம் கோவை சென்றோம். அசா1 கோவை மருத்துவமனையில் வைத்து என்னிடம் கோவில் விசேசத்திற்கு அவரும் அவர் மகளும் போனதாகவும், எதிரிகள் வந்து தங்கள் மீது மோதியதாகவும் அதை குறித்து என் கணவரிடம் சொல்லி அவர் தட்டிகேட்டபோது சண்டை ஏற்பட்டதாகவும், அதை மனதில் வைத்து 1ம் எதிரியும் மற்ற 2 எதிரிகளும் சேர்ந்து நெற்களத்தில் வைத்து என் கணவரை குத்தியதாக சொன்னார். என் கணவர் மருத்துவமனையில் பேசும் நிலையில் இல்லை. அங்கு 19ம் தேதி வரை சிகிச்சை கொடுக்கப்பட்டது. 19ம் காலை சிகிச்சை பலன்இன்றி இறந்து விட்டார். அசா1 காவல்துறையில் புகார்கொடுத்தார். அந்த புகார் ஏற்கனவே அசாஆ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னையும் விசாரித்தார்கள். சாட்சி தன்னிச்சையாக தன் மகள் தன் கணவரை கேட்டு அப்பா எங்கே என்று அழுகிறாள் என்று தெரிவித்தார். எனக்கு எவ்வித ஆதரவும் இல்லை. என் பெற்றோருக்கு வயதாகிவிட்டது.

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்

16.10.2021 அன்று மாலை 5மணிக்கு அசா1 எனக்கு போன் செய்து தகவல் சொன்ன விவரத்தை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். நானும் மீனாட்சியும் பேருந்து மூலம் நால்ரோடு வந்து இறங்கியதாகவும், ஊர்காரர் பைக்கில் மருத்துவமனை போனதாக சொன்னதை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். நான் தாராபுரம் மருத்துவமனை சென்றபோது என் கணவரை ஆம்புலன்ஸில் ஏற்றிகொண்டு இருந்தார்கள். நான் என் கணவருடன் ஆம்புலன்ஸில் போகவில்லையா என்றால் இல்லை. பேருந்தில் நானும்

அசா1ம் கோவை சென்றோம். மேற்படி விவரத்தை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். என் கணவரை அருகில் சென்று பார்த்தேனா என்றால் பார்த்தேன். என் கணவருக்கு தலையில் துண்டு கட்டப்பட்டு இருந்ததா என்றால் நான் தாராபுரம் மருத்துவமனையில் பார்த்தபோது முதல் உதவி சிகிச்சை செய்யப்பட்டு பிளாஸ்டர் போட்டு ஒட்டியிருந்தார்கள். என் கணவருக்கு குடிபழக்கம் உண்டு என்றால் இல்லை. அசா1 எனக்கு போன் செய்ததாகவும் அவரும் நானும் சேர்ந்து பேருந்து மூலம் தாராபுரம் அரசு மருத்துவமனை வந்ததாக தற்சமயம் முதன்முறையாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாராபுரம் அரசு மருத்துவமனையிலிருந்து கோவை அரசு மருத்துவமனைக்கு பேருந்தில் வந்ததாக தற்சமயம் முதன்முறையாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாராபுரத்தில் எவ்வளவு நேரம் என் கணவரை அனுப்பி விட்டு இருந்தோம் என்றால் சுமார் 1/2 மணிநேரம் மருத்துவரிடம் பேசிக்கொண்டு இருந்தோம். நான் வெளியில் நின்று கொண்டு அழுதுகொண்டிருந்தேன். என் சித்தி பேசிக்கொண்டிருந்தார். தாராபுரம் அரசு மருத்துவமனைக்கு போலீசார் வந்திருந்தார்களா என்றால் இல்லை. தாராபுரம் அரசு மருத்துவமனையில் என் சித்தியிடம் போலீசார் பேசினார்களா என்றால் இல்லை. 16ம் தேதி போலீசார் என்னை விசாரிக்கவில்லை. 17ம் தேதி மாலை 7மணிக்கு தான் போலீசார் கோவை அரசு மருத்துவமனை வந்து விசாரித்தார்கள். நான் தற்சமயம் நீதிமன்றத்தில் அசா1 எனக்கு தகவல் சொன்னதாகவும், இருவரும் பேருந்து மூலம் கோவை சென்றதாகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/எஸ்.நாகராஜன்

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி

தாராபுரம்

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)

IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, DHARAPURAM

**SC. No: 37/2022 Deposition of Witness for : P.W. 8**

| | | | |
|---|---|---|---|
| Name | : குமரேசன் | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Age | : | Taluk | : |
| Village | : | District | : |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 23.03.2023

**All Accused present.**

முதல் விசாரணை

(சாட்சி பட்டியல் படி LW 9 ஆக காட்டப்பட்டு அசா 8 ஆக விசாரிக்கப்பட்டார்)

சத்தியமாக சொல்கிறேன். நான் தற்போது சிக்கனாபுரம் தண்ணீர்பந்தலில் வசிக்கிறேன். லாரி ஓட்டுனராக வேலை செய்கிறேன். அசா.7 விசாலாட்சி என் அக்கா முறை பெரியப்பா மகள். அசா.1 மீனாட்சி என் சித்தி. மற்ற சாட்சிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள். ஆஜர் எதிரிகளை தெரியும். 16.10.2021 அன்று மாலை 5-5.30 இருக்கும். சொந்த வேலையாக தாராபுரத்திற்கு வந்தேன். எனக்கு அசா2 நவீன் குமார் போன் செய்து மாமா சுப்ரமணியை ஆஜர் எதிரிகளும் இளவர் கவின் என்பவரும் குத்தியதாக தெரிவித்தார். நான் தாராபுரம் அரசு மருத்துவமனைக்கு 5.45 மணிக்கு போனேன். அப்போது சுப்ரமணியை நவீன்குமாரும் அசா3 மாயவனும் பைக்கில் உட்காரவைத்து அழைத்து வந்தார்கள். மருத்துவர் யார் உறவினர் என்று கேட்டார் நான்தான் என்று சொன்னேன். விவரம்

கேட்டார் அப்போது எனக்கு முழுமையாக விவரம் தெரியவில்லை. அப்போது அசா1 மீனாட்சி மருத்துவமனை வந்தார். மருத்துவர் அசா1டம் என்ன நடந்தது என்று கேட்டார். அசா1 மருத்துவரிடம் அவரும் அவரது மகளும் கோவில் திருவிழாவிற்கு வந்ததாகவும் சாமி கும்பிட்டு விட்டு வந்தபோது ஆஜர் எதிரிகளும் இளவர் கவினும் மது அருந்திவிட்டு அவர்கள் மீது விழுந்ததாகவும் அதை என் சித்தி தட்டி கேட்டதாகவும், அந்த சமயத்தில்என் மாமா சுப்ரமணி சாமி கும்பிட வந்தபோது விவரம் சொன்னதாகவும், சுப்ரமணி எதிரிகளை தட்டி கேட்டதாகவும் அப்படி தான் விழுவோம் என்று எதிரிகள் சொல்லி போய்விட்டார்கள். அசா1 மற்றும் என் மாமா பேசிக்கொண்டிருந்தபோது ஆஜர் எதிரிகள் மற்றும் கவின் ஆகியோர் கத்தியை வைத்து என் மாமா சுப்ரமணியை துரத்திகொண்டு போய் உள்ளனர். என் மாமாவை களத்திற்கு வெளியே 2, 3 எதிரியும் ஒரு கவினும் கையை பிடித்து கொள்ள 1ம் எதிரி மோனீஸ் தலையில் குத்தி விட்டதாகசொன்னார். அப்போது சாட்சிகள் நவீன், மாயவன், ரமேஸ் ஆகியோர் சத்தம் போட்டதும் எதிரிகள் ஓடிவிட்டதாக சொன்னார்கள். சாட்சிகள் நவீன்குமார் , மாயவன் ஆகியோர் காயத்தை அழுத்தி பிடித்து கொண்டு மருத்துவமனைக்கு இருசக்கர வாகனத்தில்அழைத்து வந்ததாக சொன்னார்கள். மேல் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்ப இருந்தார்கள். நானும் அசா1ம் பணம் எடுக்க ஊருக்கு போனோம். ஆம்புலன்சில் அசா.7 என் அக்கா விசாலாட்சி, அசா2 நவின்குமாரும் கோவை சென்றார்கள். அந்த சமயத்தில் சம்பவம் கேள்விபட்டு என் சித்தப்பா முருகேசன் எதிரிகளிடம் சென்று ஏன் இப்படி செய்தீர்கள் என்று கேட்டதற்கு என் சித்தப்பாவை ஆஜர் எதிரிகள் அடித்ததாக கேள்விபட்டேன். நான் உடனடியாக 1ம் எதிரி மோனீஸ் வீட்டிற்கு போனேன். அப்போது என்னையும் ஆஜர் எதிரிகள் மற்றும் கவினும்

அடித்தார்கள். மோனீஸ் கல்லை எடுத்து என் தலையில் போட்டார். எனக்கு தலையின் இடதுபுறத்திலும் இடது புருவத்தின் அருகிலும் காயம்பட்டது. தாராபுரம் அரசு மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சை எடுத்துக்கொண்டு திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு போனேன். 19.10.2021 அன்று என் மாமா சிகிச்சை பலன் இன்றி இறந்து விட்டதாக கேள்விபட்டேன். நான் 21ம் தேதி வரை எனக்கு சிகிச்சை எடுத்து கொண்டேன். தாராபுரம் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்

நவீன்குமார் எனக்கு போன் செய்த விவரத்தை போலீசார் விசாரணையில் சொன்னேனாள ன்றால் நினைவில்லை. நான் போன் வந்தபோது எங்கு இருந்தேன் என்றால் தளவாய்பட்டினத்தில் இருந்தேன். நவீன் எங்கிருந்து போன் செய்தார் என்று தெரியாது. என்னிடம் எந்த இடத்தில் இருந்து பேசுவதாக சொன்னார் என்றால் தாராபுரம் அரசு மருத்துவமனை வந்து கொண்டிருப்பதாக சொன்னார். நான் அவர்களுடன் சேர்ந்து வந்தேனா என்றால் அவர்கள் ஒரு பைக்கில் வந்தார்கள். பாதியில் அவர்களை பார்த்தேன் என் பைக்கில் பின் தொடர்ந்தேன். எந்த இடத்தில் அவர்களை பார்த்தேன் என்றால் நினைவில்லை. நவீன்குமார் எனக்கு போன் செய்ததாகவும் காயமுற்றவரை பைக்கில் அழைத்து வந்ததாகவும் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாராபுரம் அரசு மருத்துவமனையில் சுப்ரமணிக்கு முதல் உதவி சிகிச்சை கொடுத்தது 1/2 மணி நேரம் இருக்குமா என்றால் இருக்கும். கூட்டம் நிறைய வந்ததா என்றால் வந்தது. போலீசார் அப்போது வரவில்லை. அன்றைய தினம் 1ம் எதிரியும் அவர் தந்தைக்கும் காயம் ஏற்பட்டு அரசு மருத்துவமனையில் சேர்ந்தார்கள் என்றால் அவர்கள் கேஸ் கொடுக்கவேண்டும் என்று சேர்ந்தார்கள். நானும் முருகேசனும் 1ம் எதிரி வீட்டிற்கு போய் தகராறு

செய்து 1ம் எதிரி மற்றும் அவரது தந்தையை தாக்கினோம் என்றால் சரியல்ல. நானும் முருகேசனும் சுப்ரமணியும் குடிபோதையில் இருந்ததால் ஊர்காரர்கள் ஓடி வந்ததால் ஒரே பைக்கில் நாங்கள் மூவரும் தப்பி செல்லும்போது நிலை தடுமாறி கீழே விழுந்து சுப்ரமணியத்திற்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. சுப்ரமணிக்கு தலையில் காயம் இருநததால் தான் அவரை மருத்துவமனையில் சேர்த்தோம் என்றும் அதனால் தான் விபத்து பதிவேட்டில் விபத்து காயம் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பின்னர் நானும் முருகேசனும் போதை தெளிந்த பிறகு அதே மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தோம் என்றால் சரியல்ல. 1ம் எதிரியும், அவரது தந்தையும் பலத்த காயம் ஏற்பட்டதால் ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு வந்ததால் அவர்கள் கடைசியாக வரவேண்டிய நிலை ஏற்பட்டது என்றால் சரியல்ல. அவர்கள் வழக்கு கொடுத்துவிடுவார்கள் என்று பயந்து விபத்து காயத்தை பயன்படுத்தி என் சித்தியை வைத்து பொய்புகார் கொடுத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும், முருகேசனும், ரமேஸ் ஆகியோர் சேர்ந்து தான் வழக்கை ஜோடித்து உள்ளோம் என்றால் சரியல்ல.

ஒப்பம்/எஸ்.நாகராஜன்

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி

தாராபுரம்

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)

IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, DHARAPURAM

**SC. No: 37/2022 Deposition of Witness for : P.W. 9**

| | | | |
|---|---|---|---|
| Name | : முருகேசன் | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Age | : | Taluk | : |
| Village | : | District | : |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 23.03.2023

**All Accused present.**

முதல் விசாரணை

(சாட்சி பட்டியல் படி LW 10 ஆக காட்டப்பட்டு அசா 9 ஆக விசாரிக்கப்பட்டார்)

சத்தியமாக சொல்கிறேன். நான் தற்போது சிக்கனாபுரம் தண்ணீர்பந்தலில் வசிக்கிறேன். விவசாய வேலை செய்கிறேன். அசா.7 விசாலாட்சி என் மகள் முறை . அசா.1 மீனாட்சி என் மனைவி. மற்ற சாட்சிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள். ஆஜர் எதிரிகளை தெரியும். புரட்டாசி மாதம் சனிக்கிழமை ஒருநாள் நான் ரோட்டிலிருந்து வந்தபோது இரவு 7 மணிக்கு என் மனைவி மீனாட்சி போன் செய்து சுப்ரமணியை குத்தி விட்டார்கள் நீ வா என்று சொன்னார். நான் கிழக்கு முகமாக மோனீஸ் வீட்டின் அருகே வந்து கொண்டிருந்தபோது ஏன் இப்படி செய்தீர்கள் என்று கேட்டேன். அப்படி தான் செய்வோம் கொத்தா கொம்மா என்று அசிங்கமாக பேசி எதிரிகள் என்னை கல்லால் சதிஸ்ம் மோனீஸ்ம் முதுகிலும் இடது பக்க தாடையிலும் அடித்தார்கள். அதனால் எனக்கு

கடந்த 1  1/2 வருடமாக என்னால் பேசமுடியாமல் இருந்தேன். 20 நாளாக தான் பேசி வருகிறேன். கொஞ்சம் கொஞ்சமாக தான் பேசமுடிகிறது. தாராபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். பின்னர் முத்து சாமி மருத்துவமனையில் சேர்ந்தேன். கொஞ்சம் கொஞ்சமாக நினைவு வருகிறது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்

கோவில் விசேசத்தின் போது நான் கோவிலுக்கு சாமி கும்பிட போனேனா என்றால் இல்லை. நான் என் மனைவியிடம் எங்கு செல்கிறேன் என்ற விவரத்தை சொன்னேனா என்றால் இல்லை. என்னிடம் செல்போன் இருந்தது என்றால் ஆமாம். நானும் அசா,8 குமரேசனும் இறந்து போன சுப்ரமணியும், குடிபோதையில் 1ம் எதிரி மோனீஸ் வீட்டிற்கு சென்று அவரையும் அவர்தந்தையும் தாக்கி காயம் ஏற்படுத்தினோம் என்றும் அதை பார்த்து ஊர்மக்கள் ஓடி வந்ததால் மூவரும் ஒரே பைக்கில் தப்பி சென்றோம் என்றும் போகும் வழியில் நிலை தடுமாறி கீழே விழுந்து மூவருக்கும் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. 1ம் எதிரி அவர் தந்தையும் காயமுற்றதால் வழக்கு கொடுத்து விடுவார்கள் என்பதால் அதிலிருந்து தப்பிக்க என் மனைவியை வைத்து விபத்தில் சுப்ரமணிக்கு ஏற்பட்ட காயத்தை வைத்து ஒரு பொய் புகார் கொடுத்துள்ளோம் என்றும் நான் அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல .

ஒப்பம்/எஸ்.நாகராஜன்

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி

தாராபுரம்

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)

IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, DHARAPURAM

**SC. No: 37/2022 Deposition of Witness for : P.W. 10**

| | | | |
|---|---|---|---|
| Name | : ஆண்டவன் | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Age | : | Taluk | : |
| Village | : | District | : |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 23.03.2023

**All Accused present.**

முதல் விசாரணை

(சாட்சி பட்டியல் படி LW 12 ஆக காட்டப்பட்டு அசா 10 ஆக விசாரிக்கப்பட்டார்)

சத்தியமாக சொல்கிறேன். நான் தற்போது சிக்கனாபுரம் தண்ணீர்பந்தலில் வசிக்கிறேன். விவசாய கூலி வேலை செய்கிறேன். அசா.7 விசாலாட்சி என் மகள் முறை. அசா.1 மீனாட்சி எனக்கு உறவு தான். சாட்சிகளை தெரியும். ஆஜர் எதிரிகளும் தெரியும். இருவரும் உறவினர்கள் தான். சம்பவம் குறித்து கேள்விபட்டேன். 17.10.2021 அன்று மதியம் 3 மணிக்கு நானும் என் மச்சினன் சக்திவேலும் ஆற்றிக்கு குளிப்பதற்காக சென்று குளித்து விட்டு மேற்கு முகமாக வந்தோம். அப்போது சுமார் 4 மணியிருக்கும். அப்போது நெற்களம் அருகே வந்தோம். அப்போது ஆய்வாளர் அவர்கள் நவீன்குமாரிடம் விசாரித்து கொண்டிருந்தார்கள். எங்களை இருக்க சொன்னார்கள். போலீசார் எழுதினார்கள். படம் வரைந்தார்கள். நான் அதில் 2 வது கையெழுத்து

போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் நான் கையெழுத்து போட்டேன் அந்த பார்வை மகஜர் அசாஆ.2. என்னுடன் சக்திவேலும் கையெழுத்து போட்டார். போலீசார் விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்

நானும் சாட்சிகளும் எதிரிகளும் ஒரே ஊர் என்றால் சரிதான். நான் வந்தபோது போலீசார் களத்தை பார்த்தார்களா அல்லது ரோட்டை பார்த்தார்களா என்றால் களத்தை பார்த்தார்கள். களம் ரோட்டிலிருந்து எவ்வளவு தூரம் தள்ளி உள்ளதுஎ ன்றால் 40 அடி தள்ளி உள்ளது. களம் சுமார் 50 அடி நீளம் அகலம் இருக்கும். போலீசார் வாய்க்காலை ஒட்டி நின்று கொண்டிருந்தார்கள். களத்திற்கு தென்புறம் உள்ள வாய்க்கால் ஆனது தார்ரோட்டிற்கு தென்புறம் கிழமேலாக உள்ளது என்றால் சரிதான். ரோடிற்கு தென்புறம் உள்ள வாய்க்கால் பக்கத்தில் போலீசார் நின்று கொண்டிருந்தார்கள். அந்த இடத்தில் கீழே ஏதாவது போலீசார் பார்த்தார்களா என்றால் இல்லை. எங்கள் முன்னிலையில் நவீன்குமார் சம்பவ இடத்தை போலீசாருக்கு அடையாளம் காட்டினாரா என்றால் இல்லை. அங்கிருந்து எந்த பொருளையும் எடுக்கவில்லை என்றால்ஆமாம். போலீசார் எத்தனை பேர் என்றால் 3 பேர் அவர்கள் ஆண் போலீசார். பைக்கில் வந்தார்கள் . கையெழுத்து எங்கு வாங்கினார்கள் என்றால் அந்த இடத்தில் வாங்கினார்கள். நான் எத்தனை வழக்குகளில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் இது தான் முதல் வழக்கு. நான் போலீசார் கேட்டதன் பேரில் காவல்நிலையம் சென்று தயாரிக்கப்பட்ட ஆவணத்தில் கையெழுத்து செய்துவிட்டு பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஊரில் கோஸ்டி அரசியல் உள்ளது என்றும் வாரத்திற்கு ஒரு வழக்கு வரும என்றால் ஆமாம். அதில் ஆஜர் எதிரிகள் ஒரு கோஸ்டியாகவும் நானும் மற்ற சாட்சிகளும் ஒரு கோஸ்டி என்றால் ஆமாம்.

அதற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/எஸ்.நாகராஜன்

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி

தாராபுரம்

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)

IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, DHARAPURAM

**SC. No: 37/2022 Deposition of Witness for : P.W. 11**

| | | | |
|---|---|---|---|
| Name | : ஆனந்த் | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Age | : | Taluk | : |
| Village | : | District | : |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 23.03.2023

**All Accused present.**

முதல் விசாரணை

(சாட்சி பட்டியல் படி LW 14 ஆக காட்டப்பட்டு அசா 11 ஆக விசாரிக்கப்பட்டார்)

சத்தியமாக சொல்கிறேன். நான் தற்போது சிக்கனாபுரம் தண்ணீர்பந்தலில் வசிக்கிறேன். விவசாய கூலி வேலை செய்கிறேன். அசா.7 விசாலாட்சி எங்கள் ஊர்தான். . அசா.1 மீனாட்சி ஒரே ஊர் தான். சாட்சிகளை தெரியும். ஆஜர் எதிரிகளும் தெரியும். 18.10.2021 அன்று மதியம் 1.30 மணிக்கு நானும் செல்வராஜ் என்பவரும் சிக்கனாபுரம் பஸ்ஸ்"டாப் அருகில் நின்றிருத்நதோம். அப்போது 1ம் எதிரி மோனீஸ் பஸ்ஸ்டாப்பில் நின்றிருநதார் . போலீசார் வந்திருந்தார்கள். வந்தவர்கள் 1ம் எதிரியிடம்விசாரித்தார்கள். 1ம் எதிரி சுப்ரமணியை தான் குத்தினேன் என்று வாக்குமூலம் கொடுத்தார். பின்னர், உடன் வந்தால் வீட்டிலுள்ள கத்தியை எடுத்து ஆஜர் செய்கிறேன் என்று சொன்னார். 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2வது கையெழுத்து

என்னுடையது. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் "என்னை அழைத்து சென்றால் கத்தியை மறைத்து வைத்துள்ள இடத்தை அடையாளம் காட்டி ஆஜர் செய்கிறேன்" என்று சொன்னார். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ.3. அதிலுள்ள 2 வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். செல்வராஜ்ம் கையெழுத்து செய்தார். மோனீஸையும் என்னையும் அழைத்து கொண்டு சம்பவ இடம் வந்தார்கள். பின்னர் மோனீஸ் வீட்டிற்கு அழைத்து சென்றார். 1ம் எதிரி மோனீஸ் வீட்டின் முன்புறம் உள்ள கல்சுவற்றிலிருந்து கத்தியை எடுத்து அதிகாரியிடம் ஒப்படைத்தார். கத்தியை கைப்பற்றும்போது 3 மணியிருக்கும். என்னிடம் காட்டப்படும் சில்வர் கத்தி தான் அது. அந்த கத்தி ஏற்கனவே சாபொ1 ஆக குறியீடு செய்யப்பட்டது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 2 வது கையெழுத்து என்னுடையது. செல்வராஜ்ம் கையெழுத்து செய்தார். அந்த கைப்பற்றுதல் மகஜர் அசாஆ.4. பின்னர் மோனீஸ்யிடம் கையெழுத்து வாங்கினார்கள். அனைவரும் காவல்நிலையம் சென்றோம்.

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்

காவல் நிலையம் சென்ற போது மணி 5 இருக்கும். காவல் நிலையம் போனபோது யார் இருந்தார்கள் என்றால் 1ம் எதிரி இருந்தார். மற்ற எதிரிகள் இருந்தார்களா என்றால் மற்ற எதிரிகளை நான் கவனிக்கவில்லை. நானும் செல்வராஜ்ம் போயிருந்தோம். போனவுடன் எழுதினார்களா என்றால் இல்லை படித்து பார்த்து கையெழுத்து போட்டேன். போனதற்கு பின்னிட்டு தான் எழுதினார்களா என்றால் ஆமாம். எழுதுவதற்கு 1 மணிநேரம் ஆனதா என்றால் நினைவில்லை. கையெழுத்து போட்டு விட்டு வரும் போது இருட்டானதா என்றால் நினைவில்லை. சிக்கனாபுரம் பஸ்ஸ்டாப்பில் நான் இருந்ததாகவும், 1ம் எதிரி அங்கு நின்று

கொண்டிருந்ததாகவும், போலீசார் வந்ததாகவும், 1ம் எதிரியை விசாரித்ததாகவும், தன்னிச்சையாக ஒப்புதல் வழங்கியதாகவும், எங்களை அழைத்து சென்று சாபொ1ஐ எடுத்து ஆஜர் செய்ததாகவும் வழக்கிற்காக போலீசார் சொன்னபடி பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. உள்ளூர் கோஸ்டியில் நான் அசா1 அணியில் இருப்பதாலும் எதிரிகள் மாற்று அணியில் இருப்பதால் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/எஸ்.நாகராஜன்

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி

தாராபுரம்